
# மனிதன் மரித்தவுடன் எங்கு போகிறான்?

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# மனிதன் மரித்தவுடன் பரலோகத்திற்கு அல்லது - அல்லது நரகத்திற்கு செல்வானா அல்லது நியாயத்தீர்ப்பிற்காக அவர்கள் காத்திருப்பார்களா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-01-03E - COD #3

*24. இப்பொழுது அநேக ஜனங்கள்... ஒய்வுநாள் ஆசரிக்கும் ஜனங்கள், ஒரு மனிதன் மரிக்கும் போது அவன் சரியாக கல்லறைக்குள் சென்று, ஆத்துமா, சரீரம் மற் றவையோடு உயிர்த்தெழுதல்வரை அங்கேயே தங்குகிறான் என்று விசுவாசிக்கின்றனர். அவர்கள் - அவர்கள் அதை "ஆத்துமா உறங்குதல்" என்று அழைப்பார்கள். நல்லது, அது சரிதான். அவர்கள் இயேசு கிறிஸ்துவை விசிவாசித்து மறுபடியும் பிறந்திருக்கும் வரையில் அது பரவாயில்லை, அது அவர் களை புண்படுத்தாது. ஆனால் இப்பொழுது வேத வசனங்களை பொறுத்த வரையில், அந்த நபர் மரிக்கும் போது, அவன் ஒரு கிறிஸ்தவனாயிருந்தால், அவன் மறுபடியும் பிறந்து பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந் தால், மரிக்கத்தக்கதாக அவன் நியாயத்தீர்ப்*

*பில் நிற்க வேண்டிய அவசியமில்லை. பாருங்கள்? அவன் நேராக தேவனுடைய பிரசன்னத்திற்குச் செல்கிறான். ஆகவே அவன் நியாயத்தீர்ப்பில் இருக்க வேண்டிய அவசியமேயில்லை, ஏனெனில் அவன் ஏற்கெனவே, பாருங்கள்?*

***25.*** *கிறிஸ்து எனக்கு செய்ததற்காக நான் காத்திருக்க வேண்டியதில்லை. இப்பொழுது, நான் ஒரு பாவியாக இருந்தேன், ஆனால் கிறிஸ்துவினுடைய நியாயத்தீர்ப்பு... இங்கே இங்கே சில வார்த்தைகளில் முழு காரியம், "அதை நீ புசிக்கும் நாளிலே, அந்த நாளிலே நீ சாவாய்." அது அவ்வளவுதான்.*

***26.*** *இப்பொழுது, தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்ளத்தான் வேண்டும். தம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்வதைத் தவிர வேறு எதையுமே அவரால் செய்ய முடியாது, ஏனெனில் அவர் தேவன். நல்லது அப்படியானால், அவரால் முடியாது. அப்படியானால், அவர் நீ தேவ*

னிடமிருந்து வேறு பிரிக்கப்படுகிறாய். அந்த ஆகவே அப்படியானால், நீ பாவத்தில் பிறந்து, பொய் பேசுகிறவனாய் உலகத்திற்கு வந்தாய். ஆதலால் நீ பிறக்கும் போது, சுபாவத்தின்படி நீ ஒரு பாவி. அதைக் குறித்துச் செய்யும்படியாய் உலகத்தில் உங்க ளுக்கு எதுவுமே கிடையாது, என்னைத் தானே அல்லது உங்களையே இரட்சித்துக் கொள்ள என்னால் செய்ய கூடியது ஒன்றுமேயில்லை. அது கிறிஸ்து நமக்காக தேவனுக்குள் என்ன செய்தார் - அல்லது தேவன் கிறிஸ்துவுக்குள் நமக்கு என்ன செய் தாரென்பதே. பாருங்கள்? அப்படித்தானே, நல்லது, ஒருக்கால் நான் இதைச் சிந்தித் தாலோ அல்லது நான் இதைச் செய்தாலோ என்பதல்ல அது. அவர் அதைச் செய்தாரா என்பதே.

**27.** நல்லது, இப்பொழுது, நாம் அவ ருக்குள் இருக்கிறோம், அப்படியானால் அவர் தேவனுடைய நியாயத்தீர்ப்பில்

இருந்தார்; அவர் நியாயத்தீர்ப்பை எடுத்தார். ஆகவே அவர், பாவத்திலிருந்து குற்றமற்றவ ராக, பாவத்தை அறியாதவராக இருந்தும் இன்னுமாக நமக்காக பாவமாக்கப்பட்டார். ஆகவே நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் வரைக்கும், நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலை யாயிருக்கிறீர்கள், "நான் இரத்தத்தை காண் கையில் உங்களைக் கடந்து போவேன்." பாருங்கள், பாருங்கள்? அதுதான். உங்களை விடுதலையாக்கும் அந்த இரத்தம்.

28. இப்பொழுது, பாவி ஒருக்காலும். பாவி நியாயத்தீர்ப்பில் நிற்கத்தான் வேண் டும். இந்த நியாயத்தீர்ப்பைத் தவிர வேறொன்றும் இராது. அது ஒரு அது கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் உலகத்தை சுற்றி இருக்கிற ஒரு வானவில் அல்லது ஒரு - ஒரு வட்டம் தான் ஆகும். இங்கே நீங்கள் எவ்வளவு காலமாக இருக்கிறீர்களோ. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகவேயன்றி தேவன் வேறு எந்த வழியிலாவது இன்றிரவு

பூமியை இந்த நிலையில் நோக்கிப் பார்ப் பாரானால், ஒரு வினாடியில் அவர் அதை அழித்துப் போடுவார். அவர் அதைச் செய்தாக வேண்டும், நிச்சயமாக அவர் செய்துத்தான் ஆகவேண்டும். அங்கேதான் நியாயத்தீர்ப்புகள் வருகின்றன.

**29.** இப்பொழுது, இல்லையென்றால் - அல்லது இங்கே கீழே ஒரு மனிதன் எவ்வளவு காலமாக இருக்கும் வரை, அந்த மனிதன் ஒரு குடிகாரனாகவும், ஒரு சூதாட் டக்காரனாகவோ அல்லது ஒரு மோசமான ஒரு அவிசுவாசியாக இருந்தாலும், தேவனு டைய இரக்கங்கள் இன்னுமாக அவனுக்காக பிராயச்சித்தம் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே ஒரு ஸ்திரீ, அவள் என்னவா யிருந்தாலும் சரி, ஒரு விபச்சாரியாகவோ, அல்லது என்னவாயிருந்தாலும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் இன்னுமாய் அவளுக்காக பிராயச்சித்தம் செய்துக் கொண் டிருக்கிறது. அவளுடைய ஆத்துமா இந்த

*சரீரத்தை விட்டுச் செல்கின்ற மாத்திரத்தில் அவள் அதற்கு புறம்பாக கடந்து செல்கி றாள், அவள் இரக்கத்தின் மேல் சென்று நியாயத்தீர்ப்புக்குள் செல்கிறாள். தேவன் ஏற்கெனவே அவளை நியாயத்தீர்த்துவிட் டார். அது காரியத்தை முற்றுப்பெறச் செய் கிறது. அது அவளுக்குச் செய்யப்படுகிறது. அவள் நியாயந்தீர்க்கப்படுகிறாள். அவள் நியாயந்தீர்க்கப்படுகிறாள்.*

*30. உங்கள் பாவங்களுக்காக அங்கே இருக்கும் தேவனுடைய பிராயச்சித்தபலியை நீ செயல்படுத்தும் விதத்தைப் பொருத்து நீ உன்னைத் தானே நியாயந்தீர்த்துக்கொள் கிறாய். பாருங்கள்? நீ உன்னைத் தானே நியாயந்தீர்த்துக்கொள்கிறாய். அவர் உன்னை மன்னிக்க மாத்திரமே போதும் என்று அவரைக் குறித்து கணக்கிடாதே, பாருங்கள்? அவர் உங்களை மன்னிப்பாரென்று நீங்கள் எண்ணினால், உங்களுடைய தவறுகளை*

அறிக்கையிடுங்கள், பிறகு அவர் உங்களை மன்னிப்பார்.

*31.* அப்படியானால் ஒரே ஆவியினால் (கவனியுங்கள்) ஒரே சரீரத்திற்குள்ளாக நாமெல்லாரும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டுள்ளோம். அந்த சரீரம் தேவனால் எழுப்பப்பட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, நீதியாக்கப்பட்டு பரலோகத்தில் வல்லமையோடும் மகத்துவத்தோடும் அவருடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார், ஆதலால் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள், நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலையானவர்கள், உயிர்த்தெழுதலில் வருவார்கள்.

*32.* இப்பொழுது, ஆனால் இப்பொழுது நாம் மரிக்கையில் நாம் இப்பொழுது மரிக்கையில், ஒரு வானத்துக்குரிய சரீரத்தில் சர்வவல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்கு நேராகச் செல்கிறோம். அங்கே நான் சகோதரன் நெவிலைச் சந்திப்பேனானால்,

இப்பொழுது நாங்கள் இருவரும் மரித்தால், இப்பொழுதிலிருந்து ஒருமணி நேரத்தில் நான் அவரைச் சந்திப்பேன்; நான், “வாழ்த்துக்கள் சகோதரன் நெவில்” என்று கூறி அவருடன் பேசுவேன். நான் அவருடைய கையை குலுக்க முடியாது; அவர் ஒரு வானத்துக்குரிய சரீரத்தில் இருக்கிறார். நான் அவருடன் பேச முடியும். இங்கே எப்படி இருக்கிறாரோ அவ்விதமாகவே அவர் காணப்படுவார். நானும் இவ்விதமாகவே இருப்பேன். ஆனால் நாங்கள் ஒருவரோடு ஒருவர் பேசுவோம், ஆனால் எங்களால் ஒருவரை யொருவர் தொடமுடியாது, ஏனெனில், பார்த்தல், ருசித்தல், உணர்தல் முகர்தல் மற்றும் கேட்டல் ஆகிய ஐந்து புலன்களில் ஒன்றாகில் எங்களிடத்தில் இருக்காது. பாருங்கள்? ஆனால் நாங்கள் அழியாமையில் இருப்போம், எங்களால் ஒருவரையொருவர் பார்க்க முடியும். நாங்கள் தேவனுடைய பீடத்தண்டையில் ஆசீர்வதிக்கப்பட்ட பரிமாணங்களில் ஜீவிப்போம்.

*யோவான் பீடத்தின் கீழே ஆத்துமாக்கள் மறுபடியுமாக பூமிக்கு வந்து தங்கள் மேல் வஸ்திரம் பெற்றுக் கொள்ள "எவ்வளவு காலம், ஆண்டவரே, எவ்வளவு காலம்" என்று கதறியதை யோவான் கண்டான் என்பது உங்களுக்குத் தெரியுமா?*

***33.*** *இப்பொழுது பரிசுத்த ஆவியின் வடிவில் நம்மில் இருக்கும் இயேசு, அவருடைய வானத்திற்குரிய சரீரம், பரிசுத்த ஆவி, மகிமையுள்ள சரீரத்தில் வரும் போது, நாம் அவருடன் அவரைப் போல மகிமைப் படுத்தப்படுவோம். நான் என்ன கூற முற்படுகிறேன் என்பதை காணமுடிகிறதா? பிறகு நான் அவருடைய கையைக் குலுக்கி "இதோ, சகோதரன் நெவில்," என்று கூறுவேன். பிறகு நாங்கள்.*

***34.*** *கவனியுங்கள். இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினார் அவர்கள் தங்கள் இராப்போஜனத்தை எடுத்துக் கொண்டிருந்*

*தனர், அவர், "நான் இந்த திராட்சப் பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்ஜியத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதை நான் பானம்பண்ணமாட்டேன்" என்றார். அது சரியா? பாருங்கள்? அதோ அது. ஆதலால் நாம்... மரித்தோர் மரிக்கும் போது. தேவனுடைய பிரசன்னத்தில் நின்று கொண் டிருக்கும் ஒரு நீதிமானாக்கப்பட்ட நபராய், அழியாமை கொண்டவனாய் அவருடைய பிரசன்னத்திற்குள் சென்று திரும்பவருகின்ற - அந்த நாள் வரைக்கும் சமாதானத்தின் ஆசீர் வதிக்கப்பட்ட பரிமாணங்களில் ஜீவித்துக் கொண்டிருப்பான்.*

***35.*** *இப்பொழுது, நீதிமானாக்கப்பட்ட ஜனங்கள் மரித்தபோது தேவனுடைய பிரசன் னத்திற்குள் செல்லாத காலம் ஒன்று இருந் தது. அது பழைய ஏற்பாட்டில் இருந்தது. அவர்கள் பரதீசு என்னும் இடத்திற்குள் சென்றனர், நீதிமான்களின் ஆத்துமாக்கள்*

*பரதீசில் காத்திருந்தன. நீதிமான்களின் ஆத்து மாக்களை தேவன் வைத்திருந்த ஸ்தலம்தான் பரதீசாகும்; இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படும் வரையில் இது ஒரு சொப்பன இடம் போன்றிருந்தது, ஏனெனில் காளைகள் மற்றும் ஆட்டுக்கடாக்களின் இரத்தம் பாவத்தை எடுத்துப் போடவில்லை, அது பாவத்தை மூடிக்கொண்டிருந்தது. ஆனால் இயேசுவின் இரத்தம் பாவத்தை எடுத்துப் போடுகின்றது.*

***36.*** *நீங்கள் கவனியுங்கள் அவருடைய - கல்வாரியில் அவர் மரித்த போது. அவர் வந்த போது, காளைகள், ஆட்டுக்கடாக்கள், மற்றும் கடாரி இவைகளின் இரத்தத்தின் பரிகாரத்தின் கீழ் மரித்த அந்த மரித்த பரி சுத்தவான்களை கல்லறையிலிருந்து வெளியே கொண்டு வந்தார். அவர்கள் நகரத்திற்குள் பிரவேசித்தார்கள், (ஓ!) அநேகருக்கு காணப் பட்டார்கள். ஓ, அதைத் தான் நாம் சற்று வரைவோமென்றால், அது எவ்வளவு*

*அழகான ஒரு காட்சி! அவர் மரித்தபோது இயேசுவை கவனித்துப் பாருங்கள்.*

***37.*** *இங்கே, நான் அடிக்கடி கூறுவது போல, இங்கே சபையில், இங்கே ஒரு பட்டியல் இருக்கிறது. இங்கே மானிடப் பிறவிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் இந்த இருட்டு மற்றும் கறுப்பு, குற்ற உணர்வான மகத்தான கூட்டுத்திரளாக உள்ளனர். இங்கே அழிந்து போகக்கூடிய மானிடப் பிறவிகள் வாழ் கின்றனர். கீழ் உலகத்திலிருந்தோ அல்லது மேல் உலகத்திலிருந்தோ ஒரு பாதிப்பு இல்லாமல் நீ இங்கே ஒரு ஆவிக்குரிய இனமாக, பாவியாகவோ அல்லது பரிசுத்த வானாகவோ, இருக்க முடியாது. இங்கிருந்து பாதிப்பு உனக்கு உண்டாயிருக்குமானால், நீ மேலிருந்து வந்தவன். உன்னுடைய வானத் திற்குரிய சரீரம் மேலே இங்கே காத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நீ ஒழுக்கக் கேடான, மாய்மாலமிக்க, இரண்டுங்கெட்ட*

நிலையில் இருந்தால், உங்களுடைய வானத் திற்குரிய சரீரம் இங்கே கீழேயே உள்ளது, அது மேலே உள்ளது என்று நீ எவ்வளவு தான் சிந்தித்தாலும் சரி; ஏனெனில் நீ கொடுக்கும் கனியானது ஜனங்களுக்கு முன் பாக நீ எங்கிருந்து வருகின்றாய் என்பதை நிரூபிக்கிறது. ஆதலால் வேறு எங்கேயோ நீ எப்படியிருக்கிறாயோ அவ்விதமே நீ இங் கேயும் இருக்கின்றாய். நீ இங்கேயிருந்து கடந்து செல்லும் போது அங்கே உன் ஜீவியமானது உன்னுடைய மரபு வழியை பிரதிபலிக்கிறது. உங்களுக்கு புரிகின்றதா?

**38.** சரியாக நாம் இப்பொழுது (ஓ, அதைக் குறித்து நான் நினைத்துப் பார்க்கையில்) - சரியாக இப்பொழுது நாம் தேவனுடைய பிரசன்னத்தில் மகிமைப்படுத் தப்பட்டு, மறுபடியும் பிறந்த விசுவாசிக ளாயிருக்கிறோம். இந்த பூமிக்குரிய கூடாரம் அழிந்துபோனாலும், நமக்கென்று ஒன்று ஏற்கெனவே மகிமையில் காத்துக் கொண்

டிருக்கிறது. "வேறெங்கேயோ அல்ல, சரியாக இப்பொழுது காத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த பூமிக்குரிய சரீரங்கள் அந்த அழியாமையால் உடுத்துவிக்கப்பட வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றன." அது சரியா? வியாதி மற்றும் பிணிகள் மற்றும் வலிகள், மற்றும் ஏமாற்றங்கள் மற்றும் இருதயவலிகள், மற்றும்... ஓ, இந்த பழைய பூச்சி நிறைந்த வீடு மூடப்படும் போது நான் மகிழ்ச்சி கொள்வேன், நீங்களும் தானே? ஆம், ஐயா! நாம் வீட்டிற்குச் செல்வோம். அது சரி.

**39.** இந்த... நாம் - தரித்துக் கொள்ள தவிக்கிறோம், ஆவிக்குரிய தவிப்பு. ஓ, சுற்றிலுமிருக்கின்ற எல்லா வேதனையும், பாவம், நாற்றம், அழிவுள்ள ஜீவியம், ஏமாற்றம் மற்றும் எல்லாமும் கொண்ட கூட்டுத் திரளை நீ நோக்கிப் பார்ப்பாயானால், நான் "ஓ, தேவனே, இது இன்னும் எவ்வளவு காலம் இருக்கும்?" என்று நினைப்பேன்.

*40.* இந்த நாட்களில் ஒன்றில் என்னுடைய கடைசி பிரசங்கத்தைச் செய்து, அதைப் போல வேதாகமத்தை கீழே வைத்து விட்டு, வீட்டிற்குச் செல்வேன். ஓ, அது என்ன ஒரு சமயமாக இருக்கும். ஆகவே இந்த பூமிக்குரிய கூடாரம் இங்கே முடிக்கப்படும்போது, நான் ஒரு வினாடிக்குள் மறுபுறம் செல்வேன்; நீங்களும் அவ்வித மாகத்தான், ஓ, என்னே! அவர்கள் கூறியதில் ஆச்சரியம் இல்லை. இந்த மாம்ச அங்கி, கீழே போட்டு மேல் எழும்புவேன் நான், நித்திய பரிசை பிடித்துக் கொள்வேன்; காற் றினூடாக செல்லும் போது சத்தமிடுவேன். (நிச்சயமாக, மேலே செல்லும் போது).

*41.* இப்பொழுது, அது எங்கேயிருக் கிறது? நாம் அதை எப்பொழுது பெற்றுக் கொள்வோம்? இப்பொழுது! "எவர்களை நீதிமான்களாக்கினாரோ, அவர்களை மகி மைப்படுத்தியுமிருக்கிறார்." ஆகவே நம்மு டைய மகிமைப்படுத்தப்பட்ட, அழியாமை

*கொண்ட சரீரம் சரியாக இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தில், நாம் வரத்தக்கதாக காத்துக்கொண்டிருக்கிறது என் பதை உங்களால் உணரமுடிகிறதா?*

***42.*** *நீங்கள் அறிவீர்களா? ஒரு குழந்தை பூமியில் பிறக்கின்ற போது, பிரசவிப்பதற்கு முன்பு அது உயிருள்ளதாயிருக்கின்றது, ஆனால் ஆனால் அது இன்னும் பிரசவிக் கப்படவில்லை. அந்த குழந்தை வரும்போதே அது - அது ஆரம்பிக்க - பிறக்கும் போது. அதன் நுரையீரல்கள் மூடப்பட்டு, அது மரித்துவிடுகின்றது. அதன் தசைகள் உதறுகின்றன, நடுங்கின்றன. ஆனால் முதல் காரியம் என்னவெனில், இதைப் போன்று ஒன்றோ அல்லது இரண்டு முறை கையினால் அதைத் தட்டும் பொழுது. (சகோதரன் பிரன்ஹாம் விளக்கிக் காண்பிக்கிறார் - ஆசி) அது (சகோதரன் பிரன்ஹாம் திணறுதல் என்ன என்பதை காண்பிக்கிறார் -ஆசி) தன் சுவாசத்தை இழுத்துக் கொள்கின்றது.*

காரியம் என்ன? ஒரு தாயினுள் மாம்ச சரீரம் உருவாகும்போதே, அந்த குழந்தை பூமியில் பிறக்கும் போதே அதை ஏற்றுக்கொள்ள ஆவிக்குரிய சரீரம் காத்திருக்கின்றது.

43. இந்த ஆவிக்குரிய சரீரத்தின் பிறப்பு எவ்வளவு நிச்சயமோ அதேபோல அது இவ்வுலகத்தைவிட்டுக் கடந்து செல்கையில் மாம்ச சரீரம் அதை ஏற்றுக் கொள்ள காத்திருக்கின்றது. பாருங்கள்? எதிர்மறையாக, மறுபடியும் சரியாக ஏதேன் (பாருங்கள்?), சரியாக அங்கே செல்கிறது.

44. இப்பொழுது, அங்கே தேவன், அதே போன்று, அது -அது மரணத்தினின்று எல்லா கூரையும் வெளியே அடித்துத் தள்ளுகிறது. எனவேதான் பவுல் நின்று "மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?" என்று கூறினதில் ஆச்சரியம் ஒன்று மில்லை. அவன் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்

கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என் றான். ஆம், நண்பர்களே! இந்த பூமிக்குரிய கூடாரம் ஒழிந்துபோனாலும் ஏற்கெனவே காத்துக் கொண்டிருக்கிற ஒன்றை நாம் கொண்டிருக்கிறோம், ஆதலால் அதை குறித்து மறந்து விடுங்கள்.

*45.* இப்பொழுது உனக்கு, நண்பனே அதைக் கேட்ட நீ ஒரு பாவியாயிருந்தால், தேவன் உன் மீது இரக்கமாயிருப்பாராக. ஆம், ஐயா! இப்பொழுது நீ ஆக்கினைக் குள்ளாக இல்லை, இங்கே இல்லை, இல்லை! நீ செழிப்பாய், சென்று கொண் டேயிரு. ஆகவே அது எல்லாம் தேவ னுடைய இரக்கங்கள் மூலமாகவே ஆகும். அவைகள் எல்லாம் தேவனுடைய இரக் கங்கள் மூலமாக நீ செழித்து நீ என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய். அது உண்மை. ஆனால் இந்த நாட்களில் ஏதாவதொன்றில், நீ ஒரு பாவியாயிருந்து உன்னுடைய ஆத்துமா வெளியே நழுவும்

போது, அது நியாயத்தீர்ப்புக்குச் சென்று ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படும், ஆகவே பிறகு, நீ புறம்பாக்கப்படுவாய், நீ மறுபடியு மாக இந்த பூமிக்கு கொண்டு வரப்படும் நாள் வரைக்கும் வேதனைக்குட்படுத்தப்பட் டிருப்பாய். நீ ஒரு அழியாத சரீரத்தை பெறுவாய், மரிக்காத ஒரு அழியாத சரீரம், பிறகு அழுகையும் கூக்குரலும் பற்கடிப்பும் இருக்கின்ற புறம்பான இருளுக்குள் தள்ளப்படுவாய், அதில் ஒரு புழு கூட சாகாது, நெருப்பும் அவியாது, வரவிருக்கின்ற எல்லா காலங்களினூடாக நீ வேதனைக் குட்படுத்தப்படுவாய், இயேசு அதைக் கூறி னார். அது ஒரு கடுமையான காட்சி, ஆனால் அதைத்தான் (வேதாகமம் கூறுகின் றது.)

***46.*** தேவன் பாவத்தைக் கடிந்து கொண்டு அதற்கு எப்படிப்பட்ட ஒரு கிரயத்தை செலுத்த வேண்டியதாயிருந்தது, அந்த அநீதியான ஆவிகள் மறுபடியுமாக

கட்டவிழ்க்கப்பட்டால் எப்படியாகயிருக்கும்? கடந்த ஆறாயிரம் வருடங்களாக நாம் கொண்டிருந்ததைப்போன்று வேறொரு காரியத்தை நாம் கொண்டிருப்போம். அது சரியா? மற்றமொரு தருணம் என்பது இருக்கவேயிருக்காது.

*47.* இப்பொழுது நீங்கள், "நல்லது, நீங்கள் கல்லறைக்கு சென்றால் நீங்கள்- நீங்கள் பாதாளத்திற்கு செல்கிறீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன்." என்று கூறலாம். உங்கள் சரீரம் பாதாளத்திற்கு செல்கிறது, அது சரி. பாதாளம் என்பதற்கு "வேறு பிரித்தல்" என்று அர்த்தம், மரணம் என்றால் "வேறுபிரித்தல்" என்று அர்த்தம். உங்கள் சரீரம் மரிக்கிறது, வேறு பிரிகிறது. நீங்கள் இங்கே உங்கள் பிரியமானவர்களிடமிருந்து சென்று விடுகிறீர்கள், ஆனால் அதைக் குறித்து நாம் பேசிக்கொண்டிருக்கவில்லை, "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு

நியாயத்தீர்ப்படைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றது".

*48.* இப்பொழுது, நீங்கள் - தேவனுடைய நியாயத்தீர்ப்பில் நிற்கவேண்டுமென்றால், நீங்கள் கோபமுள்ள தேவனால் நியாயந்தீர்க்கப்படப்போகிறீர்கள். ஆகவே தேவன் - அவர் என்ன செய்யப்போகிறார் என்பதை ஏற்கெனவே அறிவித்து விட்டார். ஆகவே நீங்கள் அங்கே செல்லுமுன்பே உங்களுடைய நியாயத்தீர்ப்பு என்னவென்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே செய்யப்படவேண்டிய காரியம் என்னவென்றால் இரட்சிக்கப்பட்டு, இந்த மகிமையான காரியத்தை கொண்டிருத்தல்.

*49.* கவனியுங்கள், நான்- என்னுடைய ஆவி... கவனியுங்கள், நாம் மரித்துப்போன ஏதோ ஒன்று அல்ல; நாம் உயிரோடிருக்கிறோம். என்னுடைய - இங்கிருக்கின்ற இந்த மேஜை - என் விரலிலுள்ள ஜீவனை இந்த பலகை கொண்டிருக்குமானால், அந்த

மரணம் - அது அசையத்தக்கதாக ஒரு சக்தியை கொண்டிருக்குமானால், என்னு டைய விரல் அசைவது போல அது அசை யும், அந்த விதமான பொருளைக் கொண்டு நாம் உண்டாக்கப்படவில்லை. நாம் அணுக் கள், ஜீவனால், நார்ப் பொருளால் உண் டாக்கப் பட்டிருக்கிறோம், இவையெல்லாம் கட்டுப்படுத்த ஒரு ஆவி அங்கேயிருக்கிறது. அது எவ்வளவு வேகமாக பயணிக்க வேண்டும் என்பது பாருங்கள். இங்கே பாருங்கன்; என் கை அதைத் தொடுகிறது. இப்பொழுது சீக்கிரத்தில்... அங்கே ஒரு எதிர்மறை (*negative*) மற்றும் ஒரு நேர் எண் (*positive*) விளைவு ஏற்படுகிறது. என் விரல் அதைத் தொட்டவுடன், அதை உணர்கிறது. அது மிக வேகத்தில் என் மனதிற்கு செல்கிறது, என் மனது "அது குளுமை யாயிருக்கிறது" என்று கூறுகிறது. அது திரும்பி விடுகின்றது. அது எவ்வளவு வேகமாக இருக்கிறது என்பதை பாருங்கள்? அது எண்ணத்தைவிட வேகமானது, எந்த

ஒன்றையும் விட வேகமான செயல் அங்கே இருக்கின்றது. அது என்ன? அங்கே அதில் ஏதோ ஒன்று உயிரோடிருக்கிறது, அந்த நரம்பு மனதின் மேல் கிரியை செய்கின்றது. நான் என்ன கூற முனைகிறேன் என்று தெரிகிறதா? நரம்பு அதை தொடுகிறது, அதை உணர்கிறது, மனதற்கு "அது குளுமையாக இருக்கிறது" என்று கூறுகிறது. மனது அது குளுமையாயிருக்கிறது என்று கூறுகிறது, ஏனெனில் அதை நரம்பு உணர்ந்து கொள்கிறது. ஓ என்னே! நீங்கள் ஒப்பனையைக் குறித்து பேசுகிறீர்கள்.

**50.** ஆகவே பிறகு - அதனுடைய எல்லாம்... நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணத்தையும் தேவன் எவ்வளவு வேகமாக அறிந்து கொள்கிறார். நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், அவர் அதை அறிந்திருக்கிறார்.

ஆதலால் ஒரு விசுவாசி மரிக்கையில் அவன் தன்னை உண்டாக்கினவராகிய, தன்னுடைய

தேவனின் பிரசன்னத்திற்குள் சென்று விடுகிறான். ஆகவே பாவியானவன், அவன் மரிக்கையில், தன்னுடைய முடிவான இடத்திற்கு செல்கிறான்.



## ஏழு பரிமாணங்கள்

1. முதலாவது பரிமாணம் – ஒளி
2. இரண்டாவது பரிமாணம் – பொருள்
3. மூன்றாவது பரிமாணம் – காலம்
4. விஞ்ஞானத்தின் மூலம் நாம் நான்காம் பரிமாணத்துடன் தொடர்பு கொள்கிறோம்
5. பாவி, அவிசுவாசி மரித்த பிறகு போகும் இடமே ஐந்தாம் பரிமாணம்
6. ஒரு கிறிஸ்தவன் மரிக்கும் போது, அவன் ஆறாம் பரிமாணத்துக்குச் செல்கிறான்
7. தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார்



# ஏழு பரிமாணங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 62-09-08 என் ஊழியத்தின் தற்போதைய கட்டம்

***19.*** *உங்களுக்கு ஞாபகமுள்ளதா, அண்மையில் எனக்குக் கிடைத்த அந்த தரிசனத்தில் - அதை சிறு மறுரூபப்படுதல் என்று அழைக்க விரும்புகிறேன் - நான் மேலே எடுக்கப்பட்டு லட்சக்கணக்கான ஜனங்களைக் கண்டு, நான் திரும்பிப் பார்த்த போது, என் உடலைக் கீழே கண்டேன். "நான் இயேசுவைக் காண விரும்புகிறேன்" என்றேன்.*

*"அவர் இன்னும் உயரத்தில் இருக்கிறார்" என்றார்.*

***20.*** *நல்லது, பாருங்கள், ஜனங்கள் மரிக்கும் போது. அவர்கள் உடனே தேவனிடம் செல்வதில்லை.*

உங்களுக்கு புரியும் என்று நிச்சயமுடையவனாய் இருக்கிறேன்.

ஒருக்கால் என்னால் முடிந்த வரையில் அதை நான் உங்களுக்கு விளக்கித் தர வேண்டும். நீங்கள் அவசரமாகப் போக வேண்டுமா? நாம் நேரத்தை எடுத்துக் கொண்டு, கூடுமான வரையில் அதை தெளிவுபடுத்துவோம்.

*21.* நாம் இவ்வுலகிற்கு வரும்போது, இங்கு மூன்று பரிமாணங்களில் வாழ்கிறோம் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

அவை என்னவென்று என்னால் குறிப்பிட முடியுமா இல்லையாவென்று எனக்குத் தெரியவில்லை.

அவைகளில் ஒன்று ஒளி, மற்றொன்று பொருள் (matter). டாமி, மூன்றாவது என்னவென்று ஞாபகமுள்ளதா? (யாரோ ஒருவர் ஏதோவொன்றை கூறுகிறார் - ஆசிரியர்)

*ஊ? ("அணு.") அணுவா? (வேறு யாரோ ஒருவர், "காலம்" என்கிறார்) காலம். சரி. இப்பொழுது,* **ஒளி, பொருள், காலம். நமது ஐம்புலன்கள் இந்த பரிமாணங்களுடன் தொடர்பு கொள்கின்றன.** *நமது பார்வை ஒளியுடன் தொடர்பு கொள்கிறது. நமது உணர்ச்சி பொருளுடன் தொடர்பு கொள் கின்றது, இப்படியாக.*

*22. ஆனால்* **விஞ்ஞானத்தின் மூலம் நாம் நான்காம் பரிமாணத்துடன் தொடர்பு கொள்கிறோம்.**

*இப்பொழுது இந்த கட்டிடத்தின் வழி யாக படங்களும், வானொலி குரல்களும், தொலைக்காட்சி படங்களும் வந்து கொண் டிருக்கின்றன.*

*இவைகளுடன் நமது புலன்கள் தொடர்பு கொள்ள இயலவில்லை.*

*ஆனால் அவர்களிடம் ஒரு குழாயோ அல்லது ஒரு படிகமோ உள்ளது. அது ஈதர் அலைகளை கிரகித்துக் கொண்டு அவை களைக் காண்பிக்கிறது.*

*எனவே பாருங்கள், இந்த கட்டிடத் திற்குள்ளேயே. ஜனங்கள் புரியும் செயல் களும், காற்றிலே அவர்களுடைய குரல்களும் உள்ளன. அவை இங்குள்ளன. அது நமக்குத் தெரியும். அது முற்றிலும் உண்மை.*

*நீங்கள் செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று; அவர்கள் அதை கிரகிக்க வைக்கின்றனர்... விஞ்ஞானம் கண்டுபிடித்த இவைகளை அவர்கள் எவ்விதம் செய்கின்றனர் என்று எனக்குப் புரிவதில்லை. ஆனால் நான்காம் பரிமாணம் ஒன்றுண்டு என்பதை அது நமக்கு நிரூபிக்கிறது.*

*23.* **பாவி, அவிசுவாசி மரித்த பிறகு போகும் இடமே ஐந்தாம் பரிமாணம்.** *அந்த*

*ஐந்தாம் பரிமாணம் மிகவும் பயங்கரமான பரிமாணம். இந்த மனிதன்.....*

**ஒரு கிறிஸ்தவன் மரிக்கும் போது. அவன் ஆறாம் பரிமாணத்துக்குச் செல்கிறான்.**

**தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார்.**

*24. அப்படியானால், பாருங்கள், கிறிஸ்தவன் மரிக்கும் போது, அவன் தேவனுடைய பலிபீடத்தின் கீழ், தேவனுடைய சமுகத்துக்குள், பலிபீடத்தின் கீழ் சென்று அங்கு இளைப் பாறுகிறான்.*

*25. இதை தனித்தனியே பார்ப்போமானால். ஒரு மனிதனுக்கு தீக்கனவு (nightmare) உண்டாகுமானால், அவன் முழுவதும் உறக்க நிலையில் இல்லை, அவன் விழித்துக் கொண்டிருக்கவும் இல்லை. அவன் உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையே உள்ள நிலையில் இருக்கிறான். அது தான்*

அவனுக்கு பயங்கரமான நடுக்கம் ஏற்படும் படி செய்து, அவனை அலற வைக்கிறது. ஏனெனில் அவன் உறங்கிக் கொண்டிருக்க வில்லை, விழித்துக் கொண்டிருக்கிறான்.

அதை நாம் எடுத்துக் கொண்டால், மனம் மாற்றம் அடையாத ஒரு மனிதன் எங்கு செல்கிறான் என்பதை அது காண்பிக் கிறது.

அவன் தன் காலத்தை வாழ்ந்து முடித்து விட்டு, உலகில் மரிக்கிறான்.

அவன் தேவனுடைய சமுகத்தில் செல்ல முடியாது.

ஏனெனில் இரத்தம் இல்லாமல் அங்கு செல்ல அவன் தகுதியுடையவன் அல்ல.

அவன் மாட்டிக் கொள்கிறான். அவனால் மறுபடியும் உலகத்திற்கு வரமுடியாது, ஏனெனில் உலகத்தில் அவனுடைய காலம் முடிந்து விட்டது.

*அவன் இடையிலே மாட்டிக் கொண்டு தீக்கனவைப் பெறுகிறான்.*

*பாருங்கள்? அவன் தேவனுடைய சமுகத்துக்குச் சென்று இளைப்பாற முடியாது. அதே சமயத்தில் அவனால் உலகத்திற்கு வரவும் முடியாது. ஏனெனில் அவனுடைய காலம் முடிந்து விட்டது. அவன் தீக்கனவில் இருக்கிறான். அங்கே அவன் நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும் இருக்கிறான். அதில் இருப்பது மிகவும் பயங்கரமான காரியம், பாருங்கள்.*

***26.*** *இந்த தரிசனத்தில், நான் ஆறாம் பரிமாணத்துக்கு எடுக்கப்பட்டேன் என்று நினைக்கிறேன். திரும்பிப் பார்க்கும் போது, என்னால் காண முடிந்தது. பாருங்கள், அந்த பார்வை பூமிக்குரிய கண்களினால் காணும் பார்வையல்ல. அந்த பார்வை மேலானது...*

**அவர்களுக்கு அங்குள்ள பார்வை, நமது மாம்சப் புலன்கள் தொடர்பு கொள்வதைக்**

**காட்டிலும் மிக அதிக தூரம் தொடர்பு கொள்ள வல்லது.**

*27. சில நாட்களுக்கு முன்பு அதை இங்கு விளக்கினேன். நான் ஒரு தொலைக் காட்சி நிகழ்ச்சியைக் கண்டேன். அவர்கள் ஒரு மனிதனை கடலில் இரண்டு மைல் அல்லது ஒரு மைல் ஆழத்தில் இறக்கி விட்டனர். ஒளிக்கதிர்கள் அங்கிருந்து புறப் பட்டு சென்றன. அவர்கள் கடலில் வாழும் பிராணிகளைக் காண்பித்தனர். அப்பொழுது ஒரு மீன் வந்தது - விகாரமாகத் தோற்ற மளித்த ஒன்று. அது நள்ளிரவு, அங்கு மிகவும் இருட்டாக இருந்தது. அவைகளுக்கு முக்கில் பாஸ்வரம் (phosphorus) இருந்தது, கண்கள் இல்லை. அவை இரை தின்ன வேண்டும். எனவே அவை இரை தேட வேறொரு புலன் மூலம் வழிநடத்தப்பட்டன. கண் பார்வையினால் அல்ல. ஏனெனில் அங்கு உபயோகிக்க அவைகளுக்கு கண்கள் இல்லை. தங்கள் இரையைக் கண்டுபிடிக்க,*

*அவை வேறொரு. புலன் மூலம் வழி நடத்தப்பட்டன. "நான் மாத்திரம் என் பார்வையினால் அந்த மீனை கட்டுப்படுத்த முடியுமென்றால், அதை வெவ்வேறு இடங் களுக்கு நடத்திச் சென்று, எவ்வளவு அதிக மாக அதற்கு இரையை அளிக்க முடியும்? அது தொடர்பு கொள்ளும் 'ரேடாரை'க் (radar) காட்டிலும் என் பார்வை எவ்வளவு மேலானது" என்று எண்ணினேன்.*

*28. அப்பொழுது எனக்கு இது மனதில் தோன்றினது: "நான் மாத்திரம் என்னை முழுவதுமாக தேவனிடம் அர்ப்பணித்தால், தேவனுடைய பார்வையும் புலன்களும் எவ்வளவு அதிகம் சக்தி வாய்ந்தவை! நாம் காண்பவைகளைக் காட்டிலும் இன்னும் அதிகமாக நம்மை வழிநடத்தக் கூடியவர் யார்? ஏனெனில் அவர் நமக்களிக்கும் விசு வாசம் நம்முடைய கண் களினால் நாம் காணாதவைகளின் நிச்சயமாக இருக்கிறது." அந்த மீன் மற்ற மீன்களைப் போலவே*

மேலே வரமுடியாது. ஏனெனில் அது அழுத்தம் கொண்டுள்ளது. அதை நீங்கள் மேலே கொண்டு வந்தால், அது வெடித்து விடும் - நாம் உயர செல்லும் போது, வெடிப்பதை தடுக்க முடியாதது போல. நாம் வாழும் இடத்துக்கு ஏற்றவாறு அழுத்தம் கொண்டுள்ளோம்.

*29.* அந்த சிறிய மீன் மாத்திரம் இங்கு வந்து என்னைப் போல ஆக நேர்ந்தால், அது மறுபடியும் அந்தகாரத்துக்கு சென்று சிறு மீனாக இருக்க விருப்பம் கொள்ளுமா?

அதற்கு மறுபடியும் மீனாக இருக்க விருப்பம் இருக்காது; ஏனெனில் அது மீனைக் காட்டிலும் உயர்ந்தது, அது ஒரு மனிதன்.

அதன் புலன்கள் உயர்ந்தவை, அதன் புரிந்து கொள்ளும் தன்மை மேலானது. அதன் அறிவு உன்னதமானது.

*அதை ஒரு கோடியில் பெருக்குங்கள், அதை தான் நீங்கள் இங்கிருந்து மேலே தேவனுடைய சமுகத்துக்கு செல்லும்போது பெறுவீர்கள்.*

*அப்பொழுது ஒரு மனிதன் இங்கிருந் ததைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையை அடைவான்.*

*நீங்கள் மறுபடியும் மனிதனாக இருக்க, வியாதியும் அழிவும் நேரிடக் கூடிய பூச் சரிக்கும் இந்த சரீரத்தில் வாழ, ஒருபோதும் விரும்பமாட்டீர்கள்.*

**நான் முப்பது ஆண்டுகளாக உலகம் முழுவதும் இந்த சுவிசேஷத்தைப் பிரசங் கித்து, ஜனங்களிடம், ஆதாயமாகப் பெற்றுக் கொள்ள பரலோகம் ஒன்று உண்டென்றும், நாம் புறக்கணிக்க வேண்டிய நரகம் ஒன்று உண்டென்றும், உங்களை நேசிக்கும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், மீட்கும் வல்லமை ஒன்று உண்டென்றும், அதை**

**நீங்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயுள்ள எந்த நேரத்திலும் உங்களிடம் வர அது காத்திருக்கிறது என்றும் கூறி வந்திருக் கிறேன். இதுவே - என் இருதயத்தில் இருந்து வந்திருக்கிறது.**

*30. தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதன் அங்கு ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, "அந்த கயிற்றை பிடித்துக் கொண்டு என்னால் மேலே வர முடியும். ஆனால் அந்த கயிற்றைப் பெற நான் பாத்திரன் அல்ல" என்று சொல்வது போல்.*

**நீங்கள் தண்ணீரை விட்டு வெளியே வந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துக்காகவே அந்த கயிறு அங்கு வைக்கப்பட்டுள்ளது.**

பாவிகளை இரட்சிக்க வேண்டும் என்னும் நோக்கத்துக்காகவே இயேசு கிறிஸ்து மரித்தார்.

அவர் நித்திய ஜீவன் என்னும் கயிற்றை தொங்க விட்டிருக்கிறார்.

அது இன்றிரவு ஒவ்வொரு பாவியின் தலைமேலும், "அதை விட்டு வெளியே வா" என்று எழுதப்பட்டுள்ள வரவேற்பு அட்டையுடன் ஆடிக் கொண்டிருக்கிறது.

அப்படி செய்ய நீங்கள் விரும்பினால், அதற்கான ஆயத்தம் செய்யப்பட்டு விட்டது.

*31.* அந்த இடத்தையும், இந்த உலகம் நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலையில் அந்த ஜனங்களையும் நான் கண்ட போது, அது மிகவும் மகிமையாயிருந்தது.

அங்கு பாவம் இருக்க முடியாது, மரணமோ அல்லது வேறெதுவோ அந்த இடத்தில் நுழைய முடியாது.

அங்கு ஆணுக்கும் பெண் ணுக்கும் வித்தியாசமில்லை, இனச்சுரபிகள் அவர்களை விட்டுப் போயிருந்தன.

அங்கு விபசாரமோ மற்றெதுவோ இருக்க முடியாது.

ஆனால் ஒரு பெண் தன் பெண் உருவத்தையும், ஒரு ஆண் தன் ஆண் உருவத்தையும் கொண்டிருந்தனர்.

அவர்கள் சதாகாலங்களிலும் அப்படியே இருப்பார்கள்.



“பூமிக்குரிய இக்கூடாரம் அழிந்து போனாலும், நமக்கு ஒன்று காத்துக்கொண்டிருக்கிறது.”



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-02-21E யார் இந்த மெல்கிசேதேக்கு?

*இப்பொழுது கவனியுங்கள். நித்திய மகத்துவமானவரும், இயற்கைக்கு அப்பாற் பட்ட தேவனுமானவர் முதலில் ஆவியாய் இருந்தார். மாம்சத்தில் வெளிப்படுவதற்காக, இரண்டாவதாக வார்த்தையென்னும் சரீரமாகிய ஆவிக்குரிய சரீரத்தில் தியோபனி (theophany) தோன்றினார். மெல்கிசேதேக்காக ஆபிரகாமை சந்தித்தபோது இவ்விதமான சரீரத்தில்தான் இருந்தார். அவர் தியாபனி உருவில் இருந்தார். கர்த்தருக்கு சித்தமானால் இன்னும் சில நிமிடங்களுக்குள் இதை நிரூபிப்போம். அவர் வார்த்தையாக இருந்தார்.*

*29.* **'தியாபனி' (theophany) யென்னும் தியாபனி உருவில் சரீரத்தை நீங்கள் பார்க்க**

**முடியாது. அது இப்பொழுது இங்கே இருக்கக்கூடும். ஆயினும் அதை நீங்கள் காணமுடியாது. அது டெலிவிஷனைப் போல இன்னொரு பரிமாணத்தில் (dimension) உள்ளது.** *டெலிவிஷன்... இப்பொழுது, மக்கள் இந்த அறையில் பாடிக்கொண்டும், அசைந்துக் கொண்டும் இருக்கிறார்கள்; பலவிதமான நிறங்களிலும் இருக்கின்றனர். ஆனால் கண்ணானது ஐந்து அறிவுகளின் தன்மைக்கு கட்டுப்பட்டிருக்கிறது. உங்களது முழு சரீரமே ஐந்து அறிவுக்குள்தான் கட்டுக்குட்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதனுடைய பார்வையின் எல்லைக்குள் இருப்பதை மாத்திரம் தான் கண் பார்க்க முடிகிறது. ஆனால் இன்னொரு பரிமாணத்தில் உள்ளதை 'டெலிவிஷன்'ஐ இயக்கும் கருவியின் மூலமாக மாத்திரமே பார்க்கமுடியும்.*

டெலிவிஷன் ஒரு உருவத்தை உருவாக்கு வதில்லை. டெலிவிஷன் ஒளி அலைகளை இழுத்து கருவியின் அமைப்புக்குள் அனுப்பும் போது அங்கிருக்கும் ஒரு சிறு திரை அவைகளை உருவங்களாக காண்பிக்கிறது. ஆரம்பத்திலேயே உருவங்கள் அங்கிருந்தன. ஆதாம் இங்கிருந்தபோது டெலிவிஷனும் அங்கே இருந்தது. எலியா கர்மேல் பர்வதத் தின் மீது இருந்த போது டெலிவிஷன் அங்கிருந்தது. நசரேயனாகிய இயேசு கலி லேயாக் கடற்கரையில் நடந்த போது டெலிவிஷன் அங்கிருந்தது. ஆனால், நீ அதை இப்பொழுதுதான் கண்டுபிடித்திருக் கிறாய். அவர்கள் அப்பொழுது அதை நம்பி இருக்க மாட்டார்கள். அதை நீ அப்பொழுது கூறியிருப்பாயானால் உன்னை பைத்தியக் காரன் என்று கருதியிருப்பார்கள். ஆனால், அது இப்பொழுது ஒரு உண்மையாகி விட் டது!

அதேப்போல், கிறிஸ்துவும் இங்கிருக்கிறார்! தேவ தூதர்கள் இங்கிருக்கிறார்கள் அந்த மகத்தான ஆயிர வருஷ அரசாட்சி வரும்போது, இப்போது இங்கிருக்கும் டெலிவிஷன் அல்லது மற்ற பொருட்களைக் காட்டிலும் அதிக நிஜமானதாகக் காணப்படும்.

தம்முடைய ஊழியக்காரர்களுக்குள் தம்மை மறைத்துக் கொண்டிருக்கிறார் என்று அவர் உரிமையோடே கூறுவது போல் தம்முடைய மகத்தான உருவத்தில் வெளிப்படுத்தி, தம்முடைய பிரசன்னத்தை நிரூபிக்கிறார்.

இப்பொழுது அவர் ஆவியின் ரூபத்தில் இருக்கிறார். பிறகு அவர் என் மார்ப்பி (Enmorphe) உருவத்தில் வருகிறார். இந்த என் மார்பில் உருவத்தில்தான் ஆபிரகாமுக்கு தோன்றினார். ஆபிரகாம் ராஜாக்களை முறியடித்த பிறகு திரும்பி வரும்போது மெல்கிசேதேக்கு அங்கே வருகிறார், அவரிடம் அவன் பேசினான்.

***30.*** *அன்றொரு நாள் டூசான் செய்தித் தாளில் ஒரு சம்பவத்தை படித்துக்கொண் டிருந்தேன் - ஒரு பெண் சாலையில் தன் னுடைய 'காரை' நாற்பது அல்லது ஐம்பது மைல் வேகத்தில் ஓட்டிக்கொண்டிருக்கும் போது, மேல் அங்கியை அணிந்திருந்த ஒரு வயதான மனிதனை இடித்துவிட்டாள். அவள் அலறிக் கொண்டே காரை நிறுத்தி னாள். அது அவனை ஆகாயத்தில் தூக்கி எறிந்திருக்கிறது. இச்சம்பவம் ஒரு வனாந் திரமான இடத்தில் நடந்திருக்கிறது. அடிப் பட்டவனை பார்ப்பதற்காக அவள் கீழே இறங்கி ஓடியிருக்கிறாள்; ஆனால் அந்த ஆளோ அங்கிருக்கவில்லை. அவளுக்கு பின் னால் வந்தவர்களும் அதே போன்று நிகழக் கண்டனர் அந்த வயதான மனிதன் தூக்கி எறியப்பட்டான் அவனுடைய அங்கி பறந் தது. ஆகவே, நடந்ததை அறிந்துக்கொள்ள அவர்களும் ஓடியிருக்கிறார்கள். அவர்கள் அந்த மனிதனை எங்கு தேடியும் காண வில்லை. அவர்கள் போலீஸ்காரரர் களை*

அழைத்தனர். போலீஸ்காரரும் அந்த இடத்தை சோதித்து பார்க்க வந்தனர். ஆனால் அந்த அடிபட்ட மனிதன் காணப் படவில்லை.

'கார்' அந்த மனிதனை இடித்ததைக் குறித்து ஒவ்வொருவரும் சாட்சி கூறினர். அவன் ஆகாயத்தில் தூக்கி எறியப்பட்டதை ஒவ்வொருவரும் பார்த்தார்கள். இரண்டு அல்லது மூன்று கார்களில் வந்தவர்கள் அதை பார்த்ததாக சாட்சிக் கூறினார்கள். காரியங் களை ஆராய்ந்து பார்த்தபோது, ஐந்து வருடங்களுக்கு முன் ஒரு வயதான மனிதன் மேல் அங்கியுடன் அந்த பக்கம் செல்லும் போது ஒரு கார் அவன் மீது மோதியதால் அந்த இடத்திலேயே அவன் மரித்து போனான் என்பது தெரிய வந்திருக்கிறது.

நீ இந்த இடத்தை விட்டு பிரியும்போது மரித்து விடுவதில்லை. நீ ஒரு பாவியாக இருந்தாலும் நீ திரும்பவும் வந்து உன் னுடைய சரீரத்தில் செய்த கிரியைகளுக்காக

நியாயந்தீர்க்கப்பட வேண்டியதாயிருக்கிறது. "பூமிக்குரிய இக்கூடாரம் அழிந்து போனாலும், நமக்கு ஒன்று காத்துக்கொண்டிருக்கிறது." *என் மார்பி* (*en morphe*), அதுதான் அந்த வார்த்தை.



பின்னர் அவள், “வெண்மையான ஆடைகள் அணிந்த ஏதோ காரியத்தாலோ அல்லது சில ஜனங்களாலோ அல்லது மனிதர்களாலோ அல்லது ஸ்திரீகளாலோ நான் பாதுகாப்பாக வீட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்லப்பட்டிருந்தேன்” என்றாள். மேலும் தொடர்ந்து அவள், “நான் இன்ப அமைதியிலே சமாதானமாய் இருந்தேன்” என்றாள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-04-19A என் சுய சரிதை

*அப்படியே, "என்னுடைய மனைவி எங்கே இருக்கிறாள்?" என்று அடித்துக் கொண்டிருந் தது.*

***207*** *முடிவிலே நான் அவளை கண்ட போது, நான் வெளியே வந்து ஒரு சில நாட்களில் அவளண்டை நான் கடந்து சென் றேன். அவள் இந்தியானாவிலுள்ள கொலம் பஸ் வழி வரை போய்விட்டாள். அங் கேயுள்ள பாப்டிஸ்டு அரங்கத்தில் ஒரு மருத் துவமனை போன்று அவர்கள் வியாதியஸ்தர் அறைகளை சிறிய அரசாங்க கட்டில்களால் அமைத்திருந்தனர். என்னால் முடிந்த அளவு கடினமாக ஓடி அவள் எங்கே இருக்கிறாள் என்று கண்டறிய "ஹோப், ஹோப், ஹோப்!" என்று கூச்சலிட்டேன். நான் நோக்கிப் பார்த்தேன். அதோ அவள் அங்கே*

ஒரு கட்டிலின்மேல் படுத்துக் கிடந்தாள். அவளுக்கு க்ஷயரோகம் உண்டாயிருந்தது.

அவள் தன்னுடைய சிறிய எலும்பான, கரத்தை உயர்த்தி, “பில்லி” என்றாள். நான் அவளண்டை ஓடி, தேனே, ஹோப்” என்றேன்.

அவள், “நான் பயங்கரமாய் காணப் படுகிறேன் அப்படித்தானே?” என்றாள்.

நான், “இல்லை, தேனே நீ நன்றாய்தான் இருக்கிறாய்” என்றேன்.

**208** அவளுடைய ஜீவனைக் காப்பாற்ற எங்களுக்குள் இருந்த எல்லாவற்றோடும் கூட நாங்கள் சுமார் ஆறு மாதங்கள் வேலை செய்தோம். ஆனால் அவளோ தொடர்ந்து பெலவீனமாகிக் கொண்டே, பெலவீனமாகிக் கொண்டே சென்றாள்.

**209.** ஒரு நாள் நான் ரோந்து போய்க் கொண்டிருந்தபோது நான் என்னுடைய

வானொலியை திருப்பினேன். தொலைபேசியில் தொடர்புகொள் என்றும், வானொலியில் அவர்கள் ஒரு பெயரிட்டு கூப்பிடுவதையும் நான் கேட்டேன்.

அது என்னவென்றால், “வில்லியம் பிரன்ஹாம் உடனே மருத்துவமனைக்கு வர வேண்டியவராயிருக்கிறார். அவருடைய மனைவியோ மரித்துக் கொண்டிருக்கிறாள்” என்று கூறினர். அப்பொழுது நான் சிகப்பு விளக்கை போட்டுக்கொண்டு, எச்சரிக்கை சங்கொலியை திறந்து விட்டு, என்னால் முடிந்த அளவு திரும்பி வேகமாக மருத்துவ மனைக்கு விரைந்தேன், பின்னர் நான் மருத்துவமனையை அடைந்ததும், நான் காரை நிறுத்திவிட்டு, உள்ளே ஓடினேன், மருத்துவமனையினூடாக வந்து கொண்டிருந்தபோது, சிறுபையன்களாய் ஒன்றாக சேர்ந்து ஓடி விளையாடியதும், ஒன்று சேர்ந்து மீன்பிடித்ததுமான என்னுடைய சிறு

*வயது நண்பர் சாம் அடயர் (Sam Adair) அவர்களை நான் கண்டேன்,*

***210*** *வைத்தியர் சாம் அடயர் அவர்கள் அண்மையில் வந்த தரிசனத்தில் இருந்த ஒருவராக இருக்கிறார். அவரையும், அவருடைய தனி மருத்துவமுனையைப் பற்றியும் நான் கூறினேன், யாராவது அந்த தரிசனத்தை சந்தேகித்திருந்தால் அந்த தரிசனம் சரியாக இருந்ததா அல்லது இல்லையா என்பதை நீங்கள் அறிந்து கொள்ள அவருடன் சற்று தொலை பேசியில் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் கூறினார்.*

***211*** *ஆக அப்பொழுது அவர் அங்கே வந்தார். அவருடைய தொப்பியை அவருடைய கரத்தில் வைத்திருந்தார். அவர் என்னை நோக்கிப் பார்த்தவுடனே அழதுவங்கினார். நான் அவரண்டை என் கரங்களை அவர்மேல் சுற்றி போட்டுக் கொண்டேன். அவர் தன்னுடைய கரங்களை என்னைச் சுற்றி போட்டுக்கொண்டு, "பில்லி*

அவள் மரித்துக் கொண்டிருக்கிறாள்'' என்றார். மேலும் அவர், "நான் வருந்துகிறேன், என்னால் முடிந்த எல்லாவற்றையும் நான் செய்தேன், நான் தனித்துறை சிறப்பு மருத்துவ வல்லுநர்களையும் *(Specialists)* வரவழைத்து எல்லா காரியங்களையும் செய்தேன்'' என்றார்.

நான், "சாம், நிச்சயமாக அவள் மரிக்கப் போவதில்லை'' என்றேன்,

அவரோ, "ஆம், அவள் மரித்துக் கொண்டிருக்கிறாள்'' என்றார்... அவர், "பில், நீ உள்ளே அங்கே போகாதே'' என்றார். நான், "சாம், நான் உள்ளே போயாக வேண்டும்'' என்றேன்.

அவரோ, "அதை செய்யாதே. செய்யாதே. தயவு செய்து செய்யாதே'' என்றார். நான், "உள்ளே போக என்னை அனுமதி

யுங்கள்'' என்றேன், அப்பொழுது அவர், "நானும் உன்னோடு வருகிறேன்'' என்றார்.

*212* நான், "இல்லை, நீர் இங்கே வெளியிலேயே இரும். அவளுடைய கடைசி நிமிடங்களில் நான் அவளோடு இருக்க விரும்புகிறேன்'' என்றேன்.

அவர், அவள் சுயநினைவற்றிருக்கிறாள்'' என்றார்.

*213* நான் அறைக்குள் நடந்து சென்றேன். மருத்துவச்சி அங்கே உட்கார்ந்து கொண்டு அழுதுகொண்டிருந்தாள். ஏனென்றால் அவளும் ஹோப்பும் ஒன்றாக பள்ளித்தோழிகளாக இருந்தனர். எனவே நான் பார்த்த போது அவள் அழத்துவங்கினாள். அவளுடைய கரத்தை தன் மேலே உயர்த்திக் கொண்டு, நடந்து சென்றாள்.

*214* நான் ஹோப்பை நோக்கிப் பார்த்து, அவளை அசைத்தேன். அவள் அங்கே இருந்தாள். அவள் சுமார் நூற்றிருபது பவுண்டு எடையிலிருந்து அறுபது பவுண் டுக்கு வந்திருந்தாள். நான்-நான் அவளை குலுக்கினேன். நான் ஒரு நூறு வயதுவரை ஜீவிக்க நேர்ந்தாலும், என்ன சம்பவித்தது என்பதை ஒருபோதும் நான் மறக்கவே மாட்டேன். அவள் அப்படியே திரும்பினாள். அந்த மகத்தான பெரிய அழகான கண்கள் என்னை நோக்கி பார்த்தன. **அவள் சிரித் தாள். அவள், “பில்லி, நீர் ஏன் என்னை திரும்ப அழைத்தீர்?” என்று கேட்டாள்.**

அப்பொழுது நான், “தேனே, எனக்கு இப்பொழுதுதான் பணம் கிடைத்தது” என் றேன்.

*215* நான் வேலை செய்யவேண்டியதாய் இருந்தது. நாங்கள் நூற்றுக்கணக்கான டாலர்

*களை வைத்தியருக்கு கட்டணமாக செலுத்த கடனுள்ளவர்களாயிருந்து, அதை கொடுத்துத் தீர்க்க ஒன்றுமே இல்லாதவர்களாயிருந்தோம். எனவே நான் வேலை செய்ய வேண்டியதாய் இருந்தது. ஒவ்வொரு இரவும் இரண்டு அல்லது மூன்று முறைகள் அவளைப் பார்த் தேன். அப்பொழுது அவள் அந்த நிலை மையில் இருந்தாள்.*

*நான், "உன்னை திரும்ப அழைத்தேன் என்று நீ எதை குறிப்பிடுகிறாய்?" என்று கேட்டேன்.*

***216*** *அவள், "பில் நீர் அதைக்குறித்து பிரசங்கித்திருக்கிறீர், நீர் அதைக்குறித்து பேசி யிருக்கிறீர். ஆனால் அது என்ன என்பதைக் குறித்த ஒரு எண்ணமும் உமக்கு இல் லையா?" என்று கேட்டாள்.*

*அதற்கு நான், "நீ எதைக்குறித்து பேசிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன்.*

*217* **அவள், "பரலோகம்" என்றாள், அவள், "பாரும்" என்றாள். பின்னர் அவள், "வெண்மையான ஆடைகள் அணிந்த ஏதோ காரியத்தாலோ அல்லது சில ஜனங்களாலோ அல்லது மனிதர்களாலோ அல்லது ஸ்திரீ களாலோ நான் பாதுகாப்பாக வீட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்லப்பட்டிருந் தேன்" என்றாள். மேலும் தொடர்ந்து அவள், "நான் இன்ப அமைதியிலே சமாதானமாய் இருந்தேன்" என்றாள். மேலும், "பெரிய அழ கான பறவைகள் மரத்திலிருந்து மரத்திற்கு பறந்து கொண்டிருந்தன."** *அதன்பின்பு அவள், "நான் பக்கத்தில் இருக்கிறதாக நினைத்துக் கொள்ளாதீர்கள்" என்றாள்.*




# தேவனுக்கு முன்பாக மனந்திரும்புதல் அவருடைய கோபத்தை நிறுத்துகிறது

செய்தி: 63-07-24 தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# மனிதன் மரித்தவுடன் எங்கு போகிறான்?



1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து